[1979 பிப்ரவரி 13

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-33 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(6) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

85. விற்பனைக் குழுவின் பணிகளைச் செய்தல், மற்றும் அதிகாரத்தைச் செலுத்துவதற்காகத் தனி அதிகாரிகளை நியமிப்பது குறித்து 2—9—1978 ஆம் தேதியிடப்பெற்ற வேளாண்மைத் துறையின் அரசாணை எண். 1478-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

86. ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர்கள், பணியாளர்களின் நடத்தை குறித்த விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 17—4—1978 ஆம் தேதியிடப்பெற்ற ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 581 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

87. மாற்றியமைக்கப் பெற்ற தமிழ்நாடு தொழிலாளர் நலக் குழுவில் திரு. பி. ஜி. கிட்டு, எம். எல். ஏ. அவர்களை ஒரு உறுப்பினராக நியமிப்பது குறித்து 2—12—1978 ஆம் தேதியிடப்பெற்ற தொழிலாளர்-வேலைவாய்ப்புத் துறையின் அரசாணை எண். 1513-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நலநிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1972) 41 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

88. கன்னியாகுமரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் எல்லா வடிவிலுமுள்ள கச்சா இரப்பரை வேளாண்மை விளைபொருளாக அறிவிப்பது குறித்தும், அம்மாவட்டத்தில் விற்கப்பெறும் எல்லா வகையான கச்சா இரப்பரை விற்பதன் மேல் கட்டுப்பாட்டினைச் செலுத்துவது குறித்தும் 21—11—1978 ஆம் தேதியிடப்பெற்ற வேளாண்மைத் துறையின் 1850 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் விற்பனைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

1979 பிப்ரவரி 13]

89. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள புதூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திலிருந்து சில கிராமங்களை நீக்குவது குறித்து 20—11—1978 ஆம் தேதியிடப்பெற்ற வேளாண்மைத் துறையின் 1838 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

90. பணமாற்றம் அடிப்படையில் இணைப் போக்குவரத்து ஆணையாளரை நியமிக்கும் பட்சத்தில் அப்பதவியினை அரசு வேளாண்மைக் கழக வரம்பெல்லையிலிருந்து நீக்கும் பொருட்டு தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசு தேர்வாணைக் கழக ஒழுங்கு விதிமுறைகளின் திருத்தமொன்று செய்வது குறித்து 18—11—78 ஆம் தேதியிடப்பெற்ற பணியாளரமைப்பு-நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் (பணியாளரமைப்பு-M) அரசாணை எண் 1287-ல் வெளியான அறிவிப்பு (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

91. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தில் 1978 ஆம் ஆண்டிற்கான பிராந்தியக் குழுவிற்கான விதிகளை வகுப்பது குறித்து 2—12—1978 ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 1495 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

*92. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1978-79 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர நிதி நிலை அறிக்கையின் விவர அட்டவணை; மற்றும் 1977–78 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கையின் விவர அட்டவணை [தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வினியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948/61(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

---

*24. உடுக்குறியிடாத வினா பட்டியல் (1 முதல் 500 வரை).